ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1578 / 6 – 2008 දෙසැම්බර් 01 වැනි සඳුදා – 2008.12.01

1578/ 6 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி III – காணிகள்

காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : எல்டீ/05/2005/ஈ/378.
பிரதேச செயலாளர் இல. : எம்ரீ/டீஎஸ்/எல்எச்ஓ/ஏசி/2005/01.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

திருகோணமலை மாவட்டத்தின், மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில், மூதூர் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில், அமைந்துள்ள இக்காணி தி/ஆயிஷா வித்தியாலயம், மூதூர் எனும் பாடசாலையின் தேவைக்காக அரசாங்கத்திற்கு வேண்டியிருப்பதால், அரசாங்க நில அளவையாளர் திரு. கே. வி. சிவானந்தன் அவர்களால் தயாரிக்கப்பட்ட பிபி/திரு/ 422 ஆம் இலக்கமுடைய நில அளவைப் படத்தின் 0.3032 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணி கீழ்க் குறிப்பிடப்படும் எல்லைகளையுடைய காணிப் பகுதியாகும்.

வடக்கு : அப்துல் சமது அப்துல் கரீம் (ரீபி 377618), வரிசை முகம்மது நஹீப், வரிசை முகம்மது ஹமிதும்மா (ரீபி 377572) ; கிழக்கு : கலிலுர் ரஹ்மான் முகினா, ஜமால் சம்சம்பீவி, கச்சு முகம்மது சகருபான் பீவி, றபீக் அசினா, தாகா சரீப் செய்யது பாத்துமா, யாசீன் லாபீர் (ரீபி 377619) ; தெற்கு : கச்சு முகம்மது நிகானா, அகமது காசீம் வகாப் (ரீபி 381025), அகமது காசீம் வகாப் அப்துல் ரஹ்மான் றுசைக்கா (ரீபி 351234), முகைதீன் செய்னம்பு (ரீபி 377618) ; மேற்கு : அப்துல் காசீம் வீதி.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2008 ஆம் வருடம் திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மூதூர் பிரதேச செயலகத்தில், என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர் களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2008 ஆம் வருடம் திசெம்பர் மாதம் 29 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

என். செல்வநாயகம்,
பிரதேச செயலாளர்.
மூதூர்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மூதூர்,
2008.11.26.

12 - 445

திருத்தல்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : வெபி/எல்/காசு/43.

அறிவித்த காணியின் துண்டு இலக்கம் பிழையாக துண்டு 01 என அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007 ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆம் திகதி 1515/ 13 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் துண்டு இல. 1411 எனத் திருத்தம் செய்யப்படுகின்றது.

டீ. கே. எஸ். ஜயலக்ஷ்மி,
பிரதேச செயலாளர்.
வெலிபிட்டிய.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
வெலிபிட்டிய,
2008.11.07.

12 - 464

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.